**தலைப்பு – 268 கிளிநொச்சி மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்குக்குகள் மற்றும் இணக்கக் கூற்று என்பன கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக் கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களிலிருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்படுவார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையறைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148இ 149இ 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள்இ ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள்இ அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல்இ தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல்இ செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

---

தலைப்பு 268 – கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல்இ அரச செலவினங்கள்இ அரச வருமானங்கள்இ மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம்இ உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்இ சட்டங்கள்இ விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள்இ பதிவேடுகள்இ அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல்இ கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல்இ செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 11 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்இ கருத்துரைகள்இ மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள்இ கணக்குகள்இ இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும்இ செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர்இ ஏனைய வளங்கள்இ காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமான தன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. செயற்திட்டங்களை பூர்த்தி செய்திருக்காமை | 2.3.1(அ) |
| | | 2. செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டமை | 2.3.1(ஆ) |
| | | 3. பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன் முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள் | 2.3.1(இ) |
| | | 4. பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல் | 2.3.2 |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | 1. பொது வைப்புக் கணக்குகளில் குறைபாடு | 2.09 |
| | | 2. வங்கிக் கணக்கு செயற்படுத்தலில் குறைபாடு | 2.10 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.11 |
| | | 4. மனிதவள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.12 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது எனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறிவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றது என்பதுவும். | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் நிலுவையாகவிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்ய முடியாதிருந்தமை | 2.8 |
| 128(1)(ச) | உத்தியோகத்தர்களின்∴ ஊழியர்களின் தாமதம்இ கவனயீனம்இ தவறுகள் அல்லது மோசடியின் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது நிதிப்பிரமாணம் 103 இலிருந்து 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்பற்றப்படுகின்றன என்பதுவும் நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள்∴ ஊழியர்கள் பேரில் மிகை அறவீடுகள் விதிக்கப்படுகின்றன என்பதுவுமாகும். | நட்டங்களும் சேதங்களும் | 2.4 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) வினைத்திறனான மாவட்ட நிர்வாக முறைமையினை ஏற்படுத்துதல்.

(ஆ) Àய பொதுச் சேவைகளை கிராமஇ பிரதேசஇ மாவட்ட பொது மக்களிற்கு வழங்குதல்.

(இ) கலாச்சார விழுமியங்கள் மற்றும் உடல் உள சார் நலம் பேணல்.

(ஈ) கிராம, பிரதேச மட்டத்தில் உள்ள மக்களின் கல்விஇ சுகாதாரம்இ விவசாயம் போன்றவற்றிற்கு உதவுவதுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களிற்கு நிவாரணங்களும் வாழ்வாதார உதவிகளும் வழங்குதல்.

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள்

மாவட்ட செயலகத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன.

| மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | செயற்பாடுகள் |
|---|---|---|
| கரைச்சி பிரதேச செயலகம்<br>கண்டாவளை பிரதேச செயலகம்<br>பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்<br>பூநகரி பிரதேச செயலகம் | 1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகங்களைத் தோற்றுவிக்கும் அதிகாரச்சட்டம் | மத்திய அரசாங்கத்தாலும் மாகாண சபைகளாலும் ஒப்படைக்கப்படுகின்ற நிர்வாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை பிரதேச மட்டத்தில் அமுல்படுத்துதல் |

## 2.3 செயலாற்றல்

### 2.3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடுதல்**

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகத்தால் கண்டாவளை பிரதேச செயலக கட்டடம் மற்றும் பெரியகுளம் அணைக்கட்டு மீள்நிர்மாண வேலை ஆகிய 02 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 41.24 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் ஒப்பந்ததாரருடனான முரண்பாட்டின் காரணமாக அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாவட்ட செயலகத்தால் மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட ரூபா 9.14 மில்லியன் பெறுமதியான மாசார்இ கொல்லக்குறிச்சி உவர்நீர் தடுப்பணை மற்றும் மாவிலங்கைக்குளம்இ குளம்பியா குள அணைக்கட்டு ஆகிய 04 செயற்திட்டங்கள் உடன்படிக்கை செய்யப்பட்ட பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பற்ற காலநிலை காரணமாக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியாதிருந்தது. எனினும் எட்டு மாதங்கள் கடந்தும் நாளது வரை அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயல் முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்**

மாவட்ட செயலகத்தினால் கண்டாவளை பிரதேச செயலக கட்டடத்தின் கட்டம் – ஐஐஐ நிர்மாண வேலைகளுக்கென கட்டடங்கள் திணைக்களத்திற்கு 2017 நவம்பர் 30 ஆம் திகதி ரூபா 20 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் நாளது வரை மேற்படி வேலை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகை வழங்கலின் போது ஒப்பந்ததாரரின் தரங்களை கருத்தில் கொள்ளப்படாது பல ஒப்பந்தங்கள் மாவட்ட செயலகத்தினால் மட்டும் அதிகளவாக வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. அதாவது ஊ7 தரத்தினை உடைய ஒப்பந்ததாரருக்கு ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட

ஒப்பந்தங்கள் வழங்க முடியாதுள்ள போதும் மாவட்ட செயலகத்தினால் பல மில்லியன் பெறுமதியில் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் இவ் பெறுகை வழங்கலின் போது குறித்த ஒப்பந்ததாரரினால் வேறு இடங்களில் செய்யப்படும் வேலைகள் தொடர்பாகவும் கருத்தில் கொள்ளப்படவில்லை. இதனால் குறிப்பிட்ட வேலைகளை விரைவாகவும் தரமாகவும் நிறைவேற்றுவதில் நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

(ஆ) கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கான சுற்றுமதில் நிர்மாணத்திற்கான பெறுகையின் போது ஒப்பந்தததாரர்களால் பல்வேறு விலைகளில் விண்ணப்பிக்கப்பட்ட போதும் அவற்றினை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அதன் கேள்வி ஆவணங்களில் காணப்பட்ட தகுதியின்மையால் நிராகரிக்கப்பட்ட போதும் பெறுகைக் குழுவினால் வேலையில் கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடாத பெறுகைக்கு தொழில்நுட்ப தகுதியற்ற ஒப்பந்ததாரருக்கு வேலை வழங்கப்பட்டிருந்தது.

(இ) கிளிநொச்சி சென்.திரேசா பெண்கள் பாடசாலை வகுப்பறை முதலாம் கட்ட கட்டட நிர்மாணம் மற்றும் கிளிநொச்சி கலவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டட நிர்மாணம் ஆகிய பெறுகைகளின் போது பெறுகைக் குழுவினால் பொருத்தமான காரணமின்றி அதி கூடிய கேள்வி விலையுடைய ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டமையால் முறையே ரூபா 108இ150இ ரூபா 232இ080 பெறுமதியான மேலதிக நிதியிழப்பு ஏற்பட்டிருந்தது.

## 2.4 நட்டங்களும் சேதங்களும்

கண்டாவளை பிரதேச செயலகத்தின் வாகனம் 2017 யூன் 16 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விபத்துக்குள்ளாகியமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இவ் நட்டம் தொடர்பாக நாளது வரை அறிவிக்கப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்டம் ஏற்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் விசாரணை குழு நியமிக்கப்பட்டு விசாரணை நடைபெற்றிருக்காததுடன்இ 13 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இவ் விபத்து தொடர்பாக எவ்வித அறிக்கையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திருத்தச் செலவான ரூபா 1இ348இ904 இல் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து ரூபா 830இ289 மட்டுமே பெறப்பட்டுள்ளதுடன் மீதி பணம் நட்டத்திற்கு பொறுப்பானவரிடமிருந்து அறவிடப்படாமல் பொதுநிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்ட செயலகத்திற்குரிய முன்னைய ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக திணைக்களத்தினால் சீராக்கப்படாதிருந்த பந்திகளுடனான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2016 | 3.7 | (ஊ) கண்டாவளை பிரதேச செயலகத்துக்கான கட்டட நிர்மாண வேலைகள் பொதுமக்களின் பயன்பாட்டுக்கேற்ற வகையில் பூர்த்தி செய்யப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (ை) | நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலுமுள்ள பொதுமக்களுக்கு 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருக்க வேண்டிய வாழ்வாதார உதவிகள் நாளதுவரை முழுமையாக வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| 2016 | 3.11 | | ஒப்பந்த வேலைகளுக்குரிய மேலதிக கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 1இ089இ438 தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2016 | 3.12 | | ஐந்து வாகன விபத்து நட்டங்கள் நாளதுவரையில் ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 3.16 | | 8 ஏப்ரல் 2014 இல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுக் கணக்குகள் குழுவின் கட்டளைகளுக்கு இணங்க ரூபா 7.2 மில்லியன் தீர்க்கப்படாத நெற்கொள்வனவு முற்பணங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எதுவும் நாளதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.6 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாரளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியினுள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடுஇ பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| 2013 | மீண்டெழுபவை | 151.38 | 148.20 | 3.18 | 2.1 |
| | மூலதனம் | 50.20 | 49.25 | 0.95 | 1.9 |
| | **மொத்தம்** | **201.58** | **197.45** | **4.13** | |
| 2014 | மீண்டெழுபவை | 145.45 | 141.38 | 4.07 | 2.8 |
| | மூலதனம் | 41.55 | 41.43 | 0.12 | 0.27 |
| | **மொத்தம்** | **187.00** | **182.81** | **4.19** | |
| 2015 | மீண்டெழுபவை | 173.60 | 170.57 | 3.03 | 1.74 |
| | மூலதனம் | 37.00 | 36.26 | 0.74 | 1.98 |
| | **மொத்தம்** | **210.60** | **206.83** | **3.77** | |
| 2016 | மீண்டெழுபவை | 190.30 | 187.39 | 2.91 | 1.53 |
| | மூலதனம் | 108.00 | 106.40 | 1.60 | 1.48 |
| | **மொத்தம்** | **298.30** | **293.79** | **4.51** | |
| 2017 | மீண்டெழுபவை | 202.73 | 192.09 | 10.64 | 5.25 |
| | மூலதனம் | 100.00 | 99.53 | 0.47 | 0.46 |
| | **மொத்தம்** | **302.73** | **291இ62** | **11.11** | |

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது நிகழாண்டில் ரூபா 11 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நேர்முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் மூலதன ஒதுக்கீடு 07 சதவீதத்தால் குறைவடைந்துள்ள போதிலும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 20 மில்லியன் மூலதன நிதி பௌதீகச் சொத்தாக உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 8.75 மில்லியன் மூலதன நிதி இன்று வரை வங்கியில் முடக்கப்பட்டுள்ளது.

## 2.7 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

---

24 ஏனைய அமைச்சுக்கள்இ 14 திணைக்களங்கள், சனாதிபதி மற்றும் பிரதம மந்திரி அலுவலகங்கள் என்பவற்றால் பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு ரூபா 2இ013.31 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 1இ896.82 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 116.49 மில்லியன் அல்லது 5.78 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) செலவின மதிப்பீடு முறையான திட்டமிடலின்றி தயாரிக்கப்பட்டமையால் 5 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான ரூபா 106இ599இ211 சேமிப்புக்கள் பதினாறு செலவுத் தலைப்பு விடயங்களில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட களவியா குள மற்றும் முறிப்புக்குள புனரமைப்பு ஒப்பந்த வேலைத்திட்டம் பெறுகை நடைமுறைக்கு முரணாக வழங்கப்பட்டமையால் ரூபா 131இ067 பெறுமதியான நிதியிழப்பு ஏற்பட்டிருந்தது.

(இ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி ஏற்பாட்டின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொற்றாந்தார் குள வீதி புனரமைப்பு ஒப்பந்த வேலை குறித்த ஒப்பந்ததாரரினால் வேலை இடைநிறுத்தப்பட்டு மீள கேள்வி கோரப்பட்டு வழங்கப்பட்டமையால் ரூபா 428இ050 நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதுடன் பெறுகை வழிகாட்டி கோவையின் 5.4.8 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் செயல் நிறைவேற்றுப் பிணைப்பொறுப்பு ரூபா 379இ047 காசாக்கப்பட்டு வருமானமாக்கப்பட்டிராமல் குறித்த ஒப்பந்ததாரருக்கு விடுவிக்கப்பட்டிருந்ததனால் ரூபா 379இ047 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஈ) மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு நிதியின் கீழ் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வட்டக்கச்சி மகா வித்தியாலய கலையரங்க கட்டட ஒப்பந்த வேலை தொடர்பாக தேசிய பெறுகை முகவர் நிலையத்தின் 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டி கோவையின் 5.3.11(ஆ)இ 5.3.13(ஈ) வழிகாட்டிகளின் பிரகாரம் ஒப்பந்ததாரரின் கேள்விப் பிணைப்பணம் ரூபா 257இ000 இழப்பிக்கப்பட்டிருக்காது இவ் வேலைத்திட்டமானது வேறொரு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டமையால் ரூபா 265இ156 நிதியிழப்பு ஏற்பட்டிருந்தது.

(உ) மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் கிளையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளபடியாக நிலுவையாகவிருந்த பணியாளர் கடன் அறவீட்டு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 517இ803 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதி 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டன.

(ஊ) மாவட்ட செயலகத்தினால் தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சினால் விடுவிக்கப்பட்டிருந்த திருத்த நிதியிலிருந்து ரூபா 6.88 மில்லியன் வட்டக்கச்சி தபால்கட்டு வீதி புனரமைப்பு வேலை 2017 நவம்பர் 01 ஆம் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வேலை நிறைவுசெய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் 2018 யூலை 30 ஆம் திகதிய கணக்காய்வு பௌதீகப் பரிசோதனையின் போது தரமற்ற மூலப்பொருள் பயன்பாடுஇ செயன்முறையிலான நலிவுகள் போன்ற காரணங்களினால் வீதி முழுவதும் தொடர்ச்சியாக உடைவடைந்து செல்லப்படுவது அவதானிக்கப்பட்டிருந்தது.

(எ) உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விடுவிக்கப்பட்டிருந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4.98 மில்லியன் பூநகரி பிரதேச செயலக சுற்றுமதில் அமைத்தல் வேலையில் உண்மையான அளவிடையானது கணிப்பீட்டுத்தாள் அளவிடையுடன் வேறுபட்டுக் காணப்பட்டதனால் ரூபா 72இ044 மேலதிக கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட போது முக்கியமான உருப்படிகளின் கணிய அளவுகள் உரிய முறையில் மதிப்பீடு செய்யப்பட்டிராமையால் விலைச் சரிக்கட்டுதல்கள் ஏற்பட்டு புதிய விலை விகிதங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டமையால் ரூபா 50இ278 மேலதிக கொடுப்பனவு ஏற்பட்டுள்ளதுடன் உருப்படி இலக்கம் 2.ர்.3 விடயத்தில் குறிப்பிடப்பட்ட கல் Àள் தளம் அமைப்பதற்கு பிறிதொரு விலை மேலதிக அட்டவணை – 06 அனுமதிக்கப்பட்டு இரட்டிப்பாக கொடுப்பனவு வழங்கப்பட்டமையால் ரூபா 53இ900 மேலதிக கொடுப்பனவாக ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ஏ) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சினது ரூபா 2.76 மில்லியன் நிதி ஏற்பாட்டின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரந்தன் வீதி புனரமைப்பு வேலைத்திட்டத்திற்காக இரண்டு ஒப்பந்ததாரர்களே பணத்தினை செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றிருந்தனர். ஆனாலும் ஒரு ஒப்பந்ததாரரது பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணத்தில் அவரது கையொப்பத்தினை வெட்டி மாற்றம் செய்யப்பட்டு விலைக்கேள்வி ஆவணத்தினை பெற்றிராத ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டமையானது கணக்காய்வில் மோசடித்தன்மை வாய்ந்த நடைமுறையாக அவதானிக்கப்பட்டிருந்தது.

**2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

மாவட்ட செயலகத்திற்குரிய 26801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கிற்கான பாரளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக்குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 15.00 | 14.90 | 11.00 | 11.59 | 45.00 | 38.93 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 644இ195 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதி 08 தொடக்கம் 14 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டன.

## 2.9 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள ஐந்து பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 41.25 மில்லியன் ஆகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு வருடங்களிற்கு மேற்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 0.51 மில்லியன் தொகையான 19 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் மாவட்ட செயலகத்திற்கு பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த கூட்டு மொத்தம் ரூபா 6.55 மில்லியன் தொகையான பணம் குறித்த பணிப்பொறுப்பு நிறைவேற்றப்பட்டிராது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 2.10 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

மாவட்ட செயலகத்தினால் 2018 யூன் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்கள் தொடர்பான பகுப்பாய்வின் படி வெளியிடப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டிற்கென வழங்கப்பட்ட போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத கூட்டுமொத்தம் ரூபா 8.55 மில்லியன் பெறுமதியுடைய 10 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வேலை முடிவுற்றதாக குறிப்பிடப்பட்டு வரையப்பட்டிருந்த ரூபா 23.46 மில்லியன் பெறுமதியுடைய 18 காசோலைகள் 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரை குறிப்பிடப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நிதிக்கையாளுகை சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 ற்கு முரணாகவும் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

## 2.11 பதிவேடுகள் மற்றும் ஏடுகளைப் பேணாமை

மாவட்ட செயலகத்தினால் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் வருமாறு.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை.். நிதிப்பிரமாணம் 502(2)இன் பிரகாரம் அதன் 11 ஆம் பின்னிணைப்பு | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வாகன நிரற்படுத்தும் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 (உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் இருப்புப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பெறுகைக் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை |

## 2.12 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.12.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்இ உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேற்படி 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்டஇ உள்ளபடியானஇ வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 150.58 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 0.51 மில்லியன் ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 20 | 18 | 02 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 16 | 01 | 15 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 282 | 223 | 65 | 06 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 57 | 49 | 08 | - |
| | | 375 | 291 | 90 | 06 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த 06 மிகை எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 90 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பொருந்தமானவாறு திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.13 நிதிக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய பணிகளை ஒப்படைத்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய பணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான நிதி அதிகாரங்களை ஒப்படைக்கும் போது அவ்வாறு ஒப்படைக்கும் உத்தியோகத்தரின் பெயரில் அல்லது பதவியில் அல்லது குறிப்பாக நிர்ணயித்து அந்தந்த உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளை காட்டும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடு பொதுவாக மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கவில்லை.